පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය :95

ආයතනයේ නම : ශ්‍රී ලංකා පොලීසිය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்றவெளியீடுகளின் தொடர் :95

நிறுவனத்தின் பெயர் : இலங்கைப் பொலிஸ்

நிலையியற் கட்டளைஇலக்கம் 119(4) யின் அடிப்படையில் பொதுக் கணக்குகள் குழுவால் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட அறிக்கை தொடர்பிலான அவதானிப்புகளையும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் சமர்ப்பித்தல்.

Parliamentary Series No : 95

Name of the Institution : Sri Lanka Police

Submission of observations of the Hon. Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of the standing order No 119(4)

பாராளுமன்ற வெளியீடுகளின் தொடர் – 95

நிறுவனத்தின் பெயர் – இலங்கைப் பொலிஸ்

நிலையியற் கட்டளை இல 119(4) யின் அடிப்படையில் பொதுக்கணக்குகள் குழுவால் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட அறிக்கை தொடர்பிலான அவதானிப்புக்களையும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற வெளியீட்டு இல – 95

நிறுவனத்தின் பெயர் - இலங்கைப் பொலிஸ்

| தொடர் இலக்கம் | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | தெரிவுக்குழுவின் அவதானிப்பும் / பரிந்துரைகளும் | அதில் காணப்படும் குறைபாடுகளினைத் திருத்துதல் சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் / தற்போதைய நிலைமைகளழம் |
|---|---|---|---|
| 01. | தகவற்தொழில் நுட்ப தரவு ஒன்றினை நடாத்திச் செல்லல் மற்றும் தொழில் நுட்பப் பொறிமுறைமையினை நிறுவுதல். சுயாதீனமான முறையில் தண்டப்பணத்தினை செலுத்துவதற்கான முறைமை ஒன்றினை அறிமுகப்படுத்திக் குறைபாடு காணப்படும் , நீதிமன்றத்தில் பதிவாகும் குற்றங்கள் தொடர்பாக தரவேற்றத் தகவல்களிற்கான தர அடிப்படையில்லாமை. | பொலிஸால் வழங்கப்படுகின்ற வேலைகள் மற்றும் அதன் செயற்பாட்டினை திறமையாகச் செயற்படுத்திட தொழில் நுட்பப் பொறிமுறைமையினை நிறுவுதல்.சம்பந்தமாக தினத்துடனான ஒட்டுமொத்தமான வேலைத்திட்டம் மற்றும் குற்றங்களைத் தடுத்தல் உள்ளிட்ட பொலிஸ் விசாரணைக்காக நவீன முறைமையிலான தொழில் நுட்பப் பொறிமுறைமையினை நிறுவுதல். மற்றும் அதற்கிருக்கும் தடைகள் உள்ளிட்ட எழுத்து மூலமான அறிக்கை ஒன்றினை ஒரு மாத காலத்திற்குள் தெரிவுக்குழுவிடம் பெற்றுக் கொடுக்குமாறும் | சுயாதீனமாக தண்டப்பணம் செலுத்தவதற்கான முறைமையினை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் அது Gov – Pay என இதுவரை இலங்கைப் பொலிஸிற்குள் செயற்படுவதுடன் தொகைக்கட்டுப்பாடு மேற்கொள்ள அனைத்துத் தொகுதிகளிலும் களஞ்சிய ஒன்றிணைத்து மத்திய கிளை ஒன்றிற்குள் நடாத்திச் செல்ல கணணி மயப்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தினை உபயோகிக்கவுள்ளதுடன் அதற்கு மென்பொருள் ஒன்றினை ( Software ) கொள்வனவு செய்வதற்கு நிதி ஒதுக்கீடு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>அனைத்துவிதமான முறைப்பாடுகளையும் ஒன்லைன் முறைமையினூடாக வீட்டிலிருந்து சமர்ப்பிக்கக்கூடிவாறு தகவல் தரவினை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருப்பதுடன் அதற்கு ஆகும் செலவு 2026 ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் மதிப்பீட்டின் மூலமாக |

| | | | |
|---|---|---|---|
| | | | ஒதுக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.அந்த வேலைத்திட்டத்தின் ஒரு கட்டமாக கீழ் தரவினை ஆரம்பித்து இதுவரை நடாத்திச் செல்லப்படுகின்றது.<br><br>Ineed.police.lk தரவு காணாமல் போய் அல்லது களவாடப்பட்ட கைத்தொலைபேசியினைத் தேடிக் கண்டுபிடிக்க அடிப்படைத் தரவு<br><br>teligp.police தரவு 05.03.2025 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டவண்ணமுள்ளது.<br><br>119 தரவு – 119 அவசரஅழைப்புப்பிரிவிற்கு வருகின்ற தொலைபேசி அழைப்புத் தகவல்கள் ஊடாக உரிய பொலிஸ் நிலையத்திற்கு மற்றும் அலுவலகங்களிற்கு அனுப்பப்படுகின்றது. இத்தரவிற்கு மேலதிகமாக கீழ்வரும் தரவும் இதுவரை இலங்கைப் பொலிஸிற்குள் செயற்படுத்தப்படுகின்றது.<br><br>1. வருகின்ற கடிதங்கள் மற்றும் அனுப்பப்படுகின்ற கடிதங்கள் ( inward & outward system ) பெயரிலான கணணித்தரவு ( இந்த தரவு மையம் இதுவரை பொலிஸ் மா அதிபரின் அலுவலகம் / சி.பி.பொ.மா.அ ( நிர்வாகம் ) அலுவலகம் சி.பி.பொ.மா.அ உதவிச்சேவைகள் உள்ளிட்ட அலுவலகங்கள் சில |

| | | | |
|---|---|---|---|
| | | | செயற்படுவதுடன் வரும்காலத்தில் இலங்கைப் பொலிஸின் அனைத்துக் காரியாலயங்களிலும் செயற்படுத் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br>2. பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமை / கடமை ஒய்வு பெறல் மற்றும் கடமை நேரப் பதிவேடு ஒன்லைன் முறையினூடாக மேற்கொள்ளஇயலும் வகையில் தயாரித்துள்ள தரவு மையம்.<br>3. பொலிஸ் போதைமருந்து ஒழிப்புப் பணியகத்தின் மூலமாக விஷ . போதைமருந்து சம்பந்தப்பட்ட கைதுசெய்யப்படுகின்ற சந்தேகநபர்கள் சம்பந்தமான தரவுகள் உள்ளிட்ட தரவு மையம் ( pnp.imc.police.lk )<br>4. பொலிஸ் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விநியோகம் செய்தல் ஒழுங்குபடுத்தலிற்காக கணணி வேலைத்திட்டம் ( full.imc.police.lk )<br>5. இலங்கைப் பொலிஸின் மூலமாக ஒப்பமிடப்பட்டுள்ள ஒப்பந்தம் சம்பந்தமாக விபரங்களடங்கிய தரவுகள். ( imc.police.lk ) agreement ) |
| 02. | 22.06.2016 ஆம் திகதி கூடிய பாராளுமன்ற நிதி சம்பந்தமான தெரிவுக் குழுவின் கலந்துரையாடலின் அறிக்கை 4.1 இருந்து 5.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள். | இந்த விடயங்கள் சம்பந்தமாக கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்துரையாடி அதுசம்பந்தமான அறிக்கை 01 ஆடி மாதம் 2023 ஆம் திகதிக்கு முன்னர் தெரிவுக்குழுவிடம் பெற்றுக் கொடுக்குமாறு | |

| | | | |
|---|---|---|---|
| | | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிற்கு தெரிவுக்குழு கட்டளையிட்டுள்ளது. | |
| | 4.1 நிதிஒதுக்கீட்டு வழிகாட்டல் ஒழுங்குவிதிகளின் வெளியேறல். | | நிகழ்காலத்தில் கொள்வனவின்போது பொருத்தமான அறிக்ைைகளினைத் தயாரித்து அதன்பிரகாரம்பொருட்களையும் சேவைகொள்ளனவு செயற்படுத்தப்படும் |
| | 4.2 ஒப்பந்தத்தினை மீறி வெளிநாடு சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து தண்டனைத் தொகை அறவீடு செய்யாமை. | | குற்றவாளியாகக் காணப்பட்ட முன்ன நாள் பொலிஸ் பரிசோதகர் ரி.கே.ஆர்.விஜேசிங்ஹ எனும் உத்தியோகத்தரிடமிருந்து 489,720.00 ரூபா தொகை 18.03.2024 ஆம் திகதி தேசி பொலிஸ் அப்பியாச நிறுவகத்தின் கணக்கிலக்கம் 7041433 எனும் கணக்கிற்கு வைப்பிடப்பட்டுள்ளது. |
| | 4.3 வேலைத்திட்டங்களை செயற்படுத்தலில் காணப்படுகின்ற குறைபாடுகள் | | இங்கிரிய பொலிஸ் நிலையம் அமைக்கும் பணிகள் இடை நடுவில் கைவிடப்பட்டமை சம்பந்தமாக 22.06.2016 ஆம் திகதி நடைபெற்ற தெரிவுக்கழுக் கலந்துரையாடலின் குறிப்பு 4.3 பந்தியின் கீழ் வினவப்பட்டுள்ளது. 05 ஏக்கர் 02 றூட் 07.2 பேர்ச்சஸ் கொண்ட காணி இலங்கைப் பொலிஸிற்கு ங்கிரிய பிரதேசிய செயலாளரினால் 21.02.2024 ஆம் திகதி அதிகாரம் கொடுத்துள்ளதுடன் இந்தக் காணி மற்றும் கட்டிடம் ( அரைவாசிக்கு அமைக்கப்பட்டுள்ளது. பொலிஸ் சேவைக்கான பயிற்சிகளிற்கான கிளை ஒன்று மற்றும் ருவன்புர அதிவேக நெடுஞ்சாலை வழியில் இங்கிரிய நுளைவாயிலில் வாகனப் போக்குவரத்து பொலிஸ் கிளை |

| | | | |
|---|---|---|---|
| | | | அமைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் காணியைச் சுற்றி பாதுகாப்பு வேலியினை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ( முன்மொழியப்பட்ட காணியைச் சுற்றி பாதுகாப்பு வேலியினை அமைப்பதற்கான வேலைத்திட்டத்திற்காக அனுமதிக்கான தளமதிப்பீடு 2,642,290.00 ரூபா ஆவதுடன் 07.04.2025 ஆம் திகதி செலவுக் கணக்கு திறக்கப்பட்டுள்ளது ) |
| | 5.1 பொலிஸ் வெகுமதி நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்த முற்பணம். | | பொலிஸ் உதவித் தொகை நிதியத்திற்கு பொலிஸ் வெகுமதி நிதியத்திலிருந்து பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள 2 மில்லியன் முன்பணம் பொலிஸ் உத்தியோகத்தர்களின் நற்சான்றிற்காக செலவிடப்பட்ட தொகையினைக் கருத்திற்கொண்டு 23.04.2021 ஆம் திகதி அத்தொகை பிரதானமாகக் கொண்டு கணக்கில் வைப’கிடப்பட்டு சீர்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நிதியம் சம்பந்தமாக அவ்வாறான நிலைமைகள் இடம்பெறாதிருக்க பொறுப்பாகவிருத்தல் வேண்டுமென உரிய உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| | 5.2 பிரையோசனமின்றி பெறப்பட்ட உபகரணங்கள். | | மோட்டார் வாகனங்களைப் பரிசோதிக்கும் உபகரணத் தொகுதிகள் 08 அளவில் இதுவரை பொலிஸ் விஷேட அதிரடிப்படைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | விநியோகிப்பதற்கான கட்டளை மூலமாக பாரம் கொடுக்கப்பட்டுள்ளதுடன் பிரபுக்கள் பாதுகாப்புக் கடமைகளில் அவ் உபகரணங்கள் பாவிக்கப்படுகின்றன. |
| | 5.3 ஒழுங்குமுறையிலான அனுமதிப்பத்திரம் பெறப்படாத தனியார் நிறுவனங்களில் மிருகங்கள் மற்றும் மிருகங்களிற்கான உலருணவுக் கொள்வனவு. | | நிகழ்காலத்தில் மிருகங்களின் கொள்வனவின்போது அனைத்து இறக்குமதியாளர்களையும் 1982 இல 29 எனும் மிருக நோய்ச் சட்டத்தின் கீழ் அனைத்துவிதமான வினியோகஸ்தர்களிற்கும் மிருக உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்திடம் பெறவேண்டிய முழுமையான அனுமதிப்பத்திரம் பெறப்படவேண்டுமென்பதுடன் இவ் அனுதிப்பத்திரம் சமர்ப்பிக்காத அவ்வுரித்து வினியோகஸ்தர்களிற்குமான அவ் உரிமைகள் துறைமுகம் மூலமாக தடையகற்றலிற்கு இயலாது.அத்துடன் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட மிருகங்களிற்குரிய International Veterinary health Certificate வினியோகஸ்தர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு அந்த அறிக்கை இலங்கை மிருக வைத்திய ஆய்வு நிறுவனத்திடம் சமர்ப்பித்து அந்த அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் அச்சிபாரின் பிரகாம் நிதி ஒதுக்கீட்டிற்கான மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். மிருக உணவு இறக்குமதி செய்யப்பட்டு பங்கிடல் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | விற்பனைக்காக 1986 இல 15 எனும் மிருக உணவுச்சட்டத்தின் பிரகாரம் மிருகவுற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் வருடாந்தம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அனுமதிப்பத்திர் பெறும் வினியோகஸ்தர் நிறுவனத்திடம் மட்டுமே அனுமதியைப் பெற்றுத்தருவதால் அவ் அனுமதிப்பத்திரம் சமர்ப்பிக்காத வினியோகஸ்தர்களிடம் உரிய உரிமை கொள்வனவு செய்யப்படமாட்டாது. |
| | 5.4 நிலையான சொத்துக்கள் மற்றும் கணணிக்கான மென்பொருட்கள் மற்றும் வன்பொருட்களிற்கான பதிவிடல் ஏடு ஒன்றினை நடாத்திச் செல்லாமை. | | இலங்கைப் பொலிஸிற்குரிய சொத்துக்களிற்கான பதிவேடு மேற்கொள்வதற்காக இலங்கைப் பொலிஸிற்குரிய நிலையான சொத்துக்கள் கணணி வன்பொருள் தரவுக்குட்படுத்தல் சம்பந்தமாக ஆலோசனை வழங்கி அனைத்துத்தொகுதிகளிற்கும் ஆலோனைப் பத்திரிகை அனுப்பப்பட்டுள்ளது.<br>இதுவரை கொம்பறோளர் நாயக்க்காரியாலயமூடாக அரச நிலையான சொத்துக்கள் மேற்பார்வையிட நிலையான சொத்துக்கள் கணணி வன்பொருள் தரவு தயாரித்தவண்ணமுள்ளதுடன் இலங்கைப் பொலிஸின் தகவல்கள் அவ்வலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. |
| | 5.5 21 குதிரைகள் வெளிநாட்டு நிறுவனமொன்றிலிருந்து கொள்வனவு செய்தல் மற்றும் குதிரைகளின் இறப்பு. | | 15.08.2023 ஆம் திகதியிலிருந்து 14.08.2028 ஆம் திகதி வரை 05 வருடங்கள் காலத்திற்காக உபசேவை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ( மிருகவைத்தியர் ) அபதவியன் கீழ் குதிரைப்படைத் |

| | | | |
|---|---|---|---|
| | | | தொகுதியிடம் மிருகவைத்தியர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.குதிரைகளின் சுகாதார நிலைமைகள் சரியாக நடாத்திச் செல்வதற்காக மிருகவைத்தியரின் ஆலோசனைப்படி இரத்தமாதிரி பெற்று உரிய பரிசீலனை அறிக்கைகளின்படி தேவையான மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கைஎடுப்பதுடன் நிரந்தரமாக குதிரைகளிற்காக அதிக நேரம் குதிரைப்பட்டிகளிற்கு வெளியால் சுதந்திரமாக இருப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. குதிரைகளிற்கு பரவக்கூடிய நோய்கள் சம்பந்தமாகவும் அவசர நோய்வாய்ப்பின் போது வழங்கப்படுகின்ற முதலுதவி மற்றும் வழங்கப்படுகின்ற முதலுதவி வழங்கும் முறைமை சம்பந்தமாகவும் குதிரைகளின் சுகாதார நிலைமைகள் உரிய முறையில் நடாத்திச் செல்வது சம்பந்தமாக எடுக்கப்படவேண்டிய சம்பந்தமாக பேராதனை மிருகவைத்திய பீடத்தின் விஷேட வைத்திய நிபுணரின் மூலமாக உரிய உத்தியோகத்தர்களிற்கும் குதிரைப்பண்ணை சேவகர்களிற்கு அறிவூட்டுவதற்கான வேலைத்திட்டம் ஒன்றினை செயற்படுத்துவதுடன் குதிரைகளிற்கான உணவிற்காக வெளிநாட்டவர்களினால் இறக்குமதி செய்யப்படுகின்ற |

| | | | |
|---|---|---|---|
| | | | குதிரை உணவுகள்விற்றமின்கள் மற்றும் மருந்துகள் கொடுத்தல் நடைபெறுகின்றது. பொலிஸ் குதிரைப்படைத் தொகுதியானது கொழும்பு, புறக்கோட்டை, ஒல்கொட் மாவத்தையில் நிறுவப்பட்டுள்ளதுடன் அப்பிரதேசத்திலிருக்கும் உஷ்ணத் தன்மை நிறைந்த காலநிலை குதிரைகள்றகாக தோதில்லாமையினால் குதிரைகளிற்குகந்த காலநிலையுடனான ஹொறணப் பிரதேசத்தில் காணி ஒன்று குதிரைப் படைத் தொகுதி ஒன்றினை அமைப்பதற்கு உகந்ததென முன்மொழியப்பட்டுள்ளதுடன் அக்காணிணினை இலங்கைப் பொலிஸிடம் அதிகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காணி மற்றும் மீள்புனரமைப்பு ஆணைக்குழுவிடமுள்ள மேற்படி காணித்துண்டு இலங்கைப் பொலிஸின் கோரிக்கைக்கமைவாக காணி மற்றும் பாராளுமன்றப் மீள் புனரமைப்பு அமைச்சரினால் காணி கைப்பற்றும் சட்டத்தின் 38(அ) இடைக்காலக் கட்டளையின் கீழ் அரசினால் கைப்பற்றப்பட்ட பின்னர் அதன் சீரமைப்பின் உரித்துத் தன்மை 28.09.2017 ஆம் திகதி ஹொறண பிரதேசச் செயலாளரினால் இலங்கைப் பொலிஸிடம் |

| | | | |
|---|---|---|---|
| | | | பாரப்படுத்தப்பட்டுள்ளது. காணித்துண்டினைக் கையகப்படுத்த எதிராக வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன்.( றீட் இல 380/2017 என்ற வழக்கு ) அவ்வழக்கின் தீர்ப்புப்படி கௌரவ நீதிமன்றினால் இக்காணியினைக் கையகப்படுத்தலிற்கமைவாக காணி கையகப்படுத்தும் சட்டத்தின் 38(அ) இடைக்கால கட்டளையின் கீழ் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தினை இல்லாது செய்து சாதாரண வழி முறையின் கீழ் கையகப்படுத்திட நடவடிக்கை எடுக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. அதன்படி காணி கையகப்படுத்தும் சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் உரிமைப் பரிசீலனை 14.07.2025 ஆம் திகதி ஹொறண பிரதேசச் செயலாளரினால் நடாத்தப்பட்டுள்ளதுடன் அதன்படி மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. |
| | 5.6 பொலிஸிற்கான நிதி ஒதுக்கீட்டிற்கான செயற்பாட்டிலுள்ள குறைபாடுகள். | | நிகழ்கால நிதிஒதுக்கீட்டு நடவடிக்கை மேற்கொள்ளும்போது இலங்கைப் பொலிஸிடம் பிணைப்பு ( Interest of confilict ) விநியோகத்தர்களிடம் வாக்குமூலம் பெறுவது மேற்கொள்ளப்படுவதுடன் உண்மையான விநியோகத்தர்களின் தகவல்களை பெறுவது எல்லாச்சந்தர்ப்பங்களிலும் செயற்படல் வேண்டுமென எல்லா |

| | | | |
|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர்களிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| | 5.7 திட்டமிடப்பட்ட குற்றங்கள். | | இலங்கைப் பொலிஸின் குற்றவியலினை கட்டுப்படுத்துவதற்காக புதிய உபாயங்களைச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது அதன்கீழ் பொதுமக்களிற்கு அறிவித்தல் செய்வது பொலிஸ் உத்தியோகத்தர்கள் புதிய குற்றங்கள் சம்பந்தமாக பயிற்சி வகுப்புக்களிற்கு அனுப்பி அறிவூட்டுதல், குற்றங்களைக் குறைப்பதற்காக பொலிஸ் சுற்றுக்களை போடுதல், கணணித் தரவு மையத்தினை அறிமுகப்படுத்தல், புதிய தொழில்நுட்பத்தை அறுமுகப்படுத்தல், ஆகிய பல்வேறுபட்ட புதிய உபாய மார்க்கங்களினூடாக குற்றங்களைக் குறைப்பதற்காகவழி செய்தல், மற்றும் குற்றங்களுடன் சம்பந்தப்பட்ட தகவல்களை பெற்றுக்கொள்ளும் போது ஏனைய பொறுப்புவாய்ந்த நிறுவனங்களிற்கு அறிவிப்பதன் மூலம் மற்றும் சம்பந்தப்படுத்தி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| | 5.8 வபகனப் போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் வீதிப்பாதுகாப்பு | | வாகன விபத்துக்களைத் தடுப்பதற்காக வாகனப் பொலிஸ் போக்குவரத்துத் தலைமையகத்தின் வழிகாட்டலின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் வீதி விபத்துக்களிற்கான விடயங்கள் மீளாய்வுக்குட்படுத்தி அவற்றினைத் |

| | | | |
|---|---|---|---|
| | | | தடுக்க எடுக்கவேண்டிய வழிமுறைகள் சம்பந்தமாக வாகனப் பொலிஸ் போக்குவரத்துத் தலைமையகத்தின் மூலம் தொகுதிகளிற்கு ஆலோசனைகளை வழங்கி அந்நடவடிக்கை இடம்பெறுகின்றதாவென மேற்பார்வை செய்து உரிய பின்புலம் மேற்கொள்ளப்படுகின்றது. |
| | 5.9 சட்டத்திற்குப் புறம்பான மயக்க மருந்துக்கான திரவங்கள் பதிவாதல் கைப்பற்றுதல் மற்றும் வழக்குத் தொடர்தல் | | சட்டவிரோதமான அபாயகரமான ஔடதங்கள் பாவனை குறைப்பதற்கு இலங்கைக் கடற்படையுடன் ஒன்றிணைந்த கூட்டு சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளல்.தற்சமயம் காணப்படும் ஊழியர் சபையினை அதிகரித்தல், நாட்டிற்குள் சமூகத்தில் காணப்படும் போதைப் பொருள் வியாபாரிகள் சம்பந்தமாக சுற்றிவளைப்பினை அதிகரித்தல், மற்றும் போதைப் பொருள் பாவனையினைத் தடுத்தல் சம்பந்தமாக புனர்வாழ்வுச் செயற்பாட்டு மற்றும் உரிய நிறுவனத்துடன்தொடர்பினை ஏற்படுத்தி தெளிவூட்டல் வேலைத்திட்டம் செயற்படுத்தல் ஆகிய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன |
| 03. | திட்டமிடப்பட்ட 2019 ஆண்டிற்குச் சமாந்தரமாக 2022 ஆண்டிற்குள் குற்றங்களின் அதிகரிப்பு | சந்தேகநபர் ஒருவர் என்ற வகையில் தரவிற்குள் உள்வாங்கப்பட்ட ஒருவர் உரிய குற்றங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு அந்நபர்களின் தரவுகளை விரைவாக அகற்றுவதற்கான பெறுமதிமிக்க போதைவஸ்து சம்பந்தமான குற்றம் | குற்றப் பதிவுத் தொகுதியில் குற்றவாளிகள் அல்லது சந்தேகநபர்கள் சம்பந்தமான கணணித் தரவுகள் உள்ளடக்கப்படும் கணணித் தரவு 05 அமைவாக் செயற்படுத்தப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் அவற்றிற்கான குற்றவாளிகள் தரவுகளிற்குள்வாங்கல் அவசியமானது எனத் தெரிவுக்குழுவானது சுட்டிக்காட்டியது. | AFIS ( Automated Fingerprint Identification System ) .<br>கணணித் தரவிற்கான குற்றங்களிற்கான எதிராளிகளிற்கு நீதிமன்றத்தினூடாக தண்டனை வழங்கப்பட்ட பின்னர் மட்டுமே அது சம்பந்தமான கணணித் தரவுகள் உள்ளடக்குவதுடன் நீதிமன்றத்தினால் எதிரிகள் முறையாக விடுதலை செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்களில் கணணித் தரவுகளிலு ள்ள தரவுகள் வலுவிளக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.<br>AMIS ( Arrested Monitoring information System ) CIMS ( Criminal Information Management System ) OCAU ( Organized Analysis Unit ) AFRS ( Automated Facial Recognition System ) எனக் கணணித் தரவுகளில் தகவல்கள் ஏதேனும் நபர் ஒருவர் மீண்டும் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டால் விசாரணைக் காரியத்திற்கு மட்டுமே பயனபடுத்துவதுடன் வேறு எந்தச் சந்தர்ப்பங்களிலும் அத்தகவல்கள் அவர்களது முன்னைய குற்ங்களாக நீதிமனடறத்திற்கோ அல்லது பொலிஸ் தடையகற்றல் பத்திரம் விநியோகிக்க பயன்படுத்தலாகாது எனபதுடன் கணணித் தரவுகளினூடாக நபர் ஒருவரிற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | சட்டவிரோதமாக பாரபட்சம் இடம்பெறலாகாது.<br><br>போதைவஸ்துக் குற்றங்கள் சம்பந்தமாக கைது செய்யப்பட்டுள்ள நபர்களின் தகவல்களை உட்புகுத்திட பொலிஸ் போதைவஸ்து ஒழிப்புப் பணியகத்தின் NIS ( Nacotics I nfornation Sistem ) இன் தரவு மேடை ஒனறினை உருவாக்கி நடாத்திச்செல்வதுடன் அதனை நாடுபூறாகவும் அமைந்நிருக்கும் பொலிஸ் நிலையங்கள் மற்றும் சட்டத்தை செயற்படுத்தும் நிறுவனங்களின் தகவல்களைப்பெற்று நிரந்தரமாக நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 04. | குற்றங்களின் வழக்குகளை தீர்த்துவைத்தல். | நீதிமன்ற நடவடிக்கைகளில் கலந்துகொள்ளும் பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கு ஏற்படுகின்ற இயலாமைகளை தடுத்து பொலிஸ் சேவையின் உன்னத தன்மையை உயர்த்தும் விதத்தில் பொலிஸ் மா அதிபரினால் வழங்கப்படும் உரிய சுற்றுநிருபங்கள் சம்பந்தமாக நீதிச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்குமாறு பொலிஸ் மா அதிபரிற்கு தெரிவுக்குழுவினால் கட்டளையிடப்பட்டுள்ளது. | நீதிமன்ற நடவடிக்கைகளிலீடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கு ஏற்படுகின்ற இயலாமைகளை தடுத்து பொலிஸ் சேவையின் உன்னத தன்மையை உயர்த்தும் விதத்தில் பொலிஸ் மா அதிபரினால் வழங்கப்படம் உரிய சுற்றுநிருபங்கள் சம்பந்தமாக நீதிச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்குமாறு பொலிஸ் மா அதிபரிற்கு தெரிவுக்குழுவினால் கட்டளையிடப்பட்டுள்ளது. |
| 05. | பொலிஸ் வெகுமதி நிதியம் | பொலிஸ் வெகுமதி நிதியத்திலிருந்து வழங்கப்படுகின்ற கட்டளைகள் உரிய முறையில் நிகழ்காலத்திற்கேற்றாற்போல் ஒழுங்கு முறையில் செயற்படுத்த பொலிஸ் வெகுமதி நிதியத்திற்கு விரிவான பங்களிப்பினை வழங்கும் | 01.03.2025 ஆம் திகதிய இல 2778/2024(11) எனும் பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்தின் மூலமாக கொடுப்பனவுகளை சமனிலைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | பொலிஸ் போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்படுகின்ற வெகுமதித் தொகையின் அளவினை அதிகரிக்குமாறு பொலிஸிற்கு தெரிவுக்குழுவினால் கட்டளையிடப்பட்டுள்ளது. | |
| 06. | ஊழியர் சபை | சீருடை ஊழியர் சபையின் குறைபாடுகள் சம்பந்தமாகக் கவனத்தினைச் செலுத்திய தெரிவுக்குழுவானது பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பதவிகளில் குறைபாடுகள் பெரும்பாலும் காணப்படுவது சம்பந்தமாக விசாரித்தது. அதேபோன்று பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பதவிகளில் இருக்கும் குறைபாடுகள் காரணமாக சிறுவர்கள் மற்றும் பெண்களிற்கான முறைப்பாடுகள் சம்பந்தமாக உரிய முறையில் செயற்பாடுகள் செயற்படுத்தாமை தெரிவுக்குழுவினால் அவதானிக்கப்பட்டது.<br><br>பொலிஸ் நிலையங்களிற்கு நிச்சயிக்கப்பட்ட அனுமதியுள்ள செயற்பாட்டுச் சபை செயற்படாமை பல உத்தியோகத்தர்களிற்கு தனிப்பட்ட ரீதியில் பதவி உயர்வுகளை வழங்குதல் உதவிச் சேவைகளனிற்கான பதவிகளில் காணப்படுகின்ற குறைபாடுகள சீருடை சபையினால் நிரப்புதல் போன்ற தொடர் நிலை காரணமாக குறைபாடுகள் மற்றும் மேலதிக பதவிகள் போதுமான அளவு உறுதிபட காணப்படமுடியாமை தெரிவுக்குழுவின் | பெ.பி.பொ.மா.அ பதவிக்கு பதவியுயர்த்துவதற்காக ஆசேர்ப்புச் செய்தல் மற்றும் பதவியுயர்வுக்கான ஒழுங்கு விதிகள் பிரகாரம் தகுதியுள்ள பெ.சி.பொ.அ பதவியில் உள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்ப் படிவம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் வரும் காலத்தில் நேர்முகத் தேர்வு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.அந்த நேர்முகத் தேர்வின் பின்னர் பெ.பி.பொ.மா.அ பதவியில் காணப்படுகின்ற குறைபாடுகள் முழுமைப்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பமைம்.<br><br>பெ.பி.பொ.மா.அ பதவி மற்றும் அதற்குக் கீழான பதவிகளில் காணப்படுகின்ற குறைபாடுகளின ஆசேர்ப்புச் செய்தல் மற்றும் பதவியுயர்வுக்கான ஒழுங்கு விதிகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள சிரேஷ்ட தரத்தினை அடிப்படையின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதி |

| | | | |
|---|---|---|---|
| | | அவதானிப்புக்குள்ளானது.<br>அதேபோன்று ஆடசேர்ப்பு மேற்கொள்ளல் மற்றும் பதவி உயர்களிற்கான விதி முறைகளை ஒழுங்குபடுத்தும் வகையில் செயற்படுத்தப்படவில்லையெனவும் தெரிவுக்குழுவின் அவதானிப்புக்குள்ளானது.<br><br>பொலிஸ்உள்ளக கணக்காய்வுத் தொகுதில் காணப்படுகின்ற ஊழியர் சபையிலுள்ள குறைபாடுகளை நிரப்பிட தேவையான கோரிக்கைகளை மேற்கொண்டு தெரிவுக்குழுவிடம் அறிக்கையிடுமாறு பொது மக்கள் பாதுகாப் அமைச்சின் செயலாளரிற்கு தெரிவுக்குழுவினால் கட்டளையிடப்பட்டது. | ஒதுக்கீட்டிற்கமைவாக குறைபாடுகளின் அளவிற்காக பதவியுயர்வு வழங்கிட அமைச்சரவையின் அனுமதிளினைப் பெற்றுக்கொள்ளவும், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினதும் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்ள 15.07.2025 ஆம் திகதி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், அதன்படி அக்குறைபாடுகள் சீர்படுத்திட தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>08.08.2025 ஆம் திகதி பெ.பொ.கா பதவிகளில் 4,040 பேரிற்கான குறைபாடு நிலவுவதுடன் அதில் 500 பேரளவில் வரும்காலத்தில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>பொலிஸ் நிலையங்களை தரப்படுத்தலிற்கமைவாக அந்தந்தப் பொலிஸ் நிலையங்களில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் இருக்கவேண்டிய பெண் உத்தியோகத்தர்களின் அளவினைக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதன்படிசிறுவர்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் இருக்கும் இருக்கும் பெண் |

| | | | |
|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர்களின் குறைபாடுகள் பூர்த்தி செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>இலங்கைப் பொலிஸின் சாதாரண சேவை, பொலிஸ் விஷேட அதிரடிப்படை மற்றும் பொலிஸ் உதவிச்சேவைகளிற்காக உத்தியோகபூர்வமாக வெவ்வேறுபட்ட பதவியுயர்வுகளிற்கான முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கைப் பொலிஸிற்காக அனுமதிக்கப்பட்ட பொலிஸ் உதவிச்சேவை பதவிகளில் காணப்படும் குறைபாடுகள் சீர் செய்து நிப்புவதற்காக தேவையான நடவடிக்ைககள் எடுக்கப்பட்ட வண்ணமுள்ளது. அதன்படி உதவிச்சேவை பதவியுயர்வுகளிற்காக சீருடை தொடர்பான சபையில் குறைபாடுகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட மாட்டாது.<br><br>இலங்கைப் பொலிஸில் அரச வர்த்தமானியில் பெயர் வெளியிடப்பட்ட பதவிகளிற்கமைவாக ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பதவியுயர்வுகளிற்கான ஒழுங்கு விதிகள் 19.07.2019 ஆம் |

| | | | |
|---|---|---|---|
| | | | திகதியிலிருந்து செயற்படுத்தப்படுவதுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிகளிலிருந்து மஹ சாஜன் பதவிகள் வரையான ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பதவியுயர்வுகளிற்கான ஒழுங்கு விதிகள்<br><br>24.04.2025 ஆம் திகதி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அகுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.<br><br>ஏனைய பதவிகளிற்கு ( உதவிப் பொலிஸ் பரீட்சகர்களிலிருந்து பிரதான பொலிஸ் பரீட்சகர்கள் பதவி வரையான பதவிகள் மற்றும் சாரதிகளிற்கான பதவிகள் ) அமைவாக பதவியுயர்வுகளிற்கான ஒழுங்கு விதிகளில் திருத்தம் மேற்கொள்ள தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளது<br><br>இலங்கைப் பொலிஸிற்காக அனுமதிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களிற்கான பதவிகள் 533 இல் குறைபாடு 226 ம் நிரப்பிடவும், அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்திடும் செயற்பாடுகள் மீழாய்வுக்குட்படுத்தவும் மற்றும் காரிய சபை முகாமைத்துவவம் செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர்கள் குழுவின் அனுமதி கிடைத்துள்ளது.( அமைச்சரவைச் செயலாளர் அவர்களின் இலPMO/RRPCM/2025/decision மற்றும் 02.04.2025 ஆம் திகதிய கடிதத்தின் மூலமாக ) அதன்படி உத்தியோகத்தர்களை வழங்குமாறு கூட்டுச் சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்ைக விடுக்கப்பட்டுள்துடன் அவ் உத்தியோகத்தர்களில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக 28 உத்தியோகத்தர்களை நியமிக்கப்படவுள்ளனர் |
| 07. | பொலிஸ் மத்திய ஆயுதக் களஞ்சியத்தில் காணப்படுகின்ற குறைபாடுகள் | நாட்டின் அனைத்துவிதமான பொலிஸ் நிலையங்களிலும் இருக்கும் காலம் கடந்த கண்ணீர்ப் புகைகள் ( Tear Gas shells ) மற்றும் கண்ணீர்ப் புகைக்குண்டுகள் ( Tear Gas Grenades ) அதே போன்று காலம் கடந்த ஆயுதங்களை அனுமதியின்றி பாவனைக்குட்படுத்தல் விரைவு படுத்துமாறு தெரிவுக்குழுவினால் கட்டளையிடப்பட்டது.அதேபோன்று இவ்வாறான கொள்வனவு செய்யும்போது அளவேயில்லாதளவில் ஆடர்பண்ணப்படுவதால் பணம் தேவையில்லாமல் செலவாவதாகச் சுட்டிக்காட்டிய தெரிவுக்குழவானது அவ்வாறு செயற்படாதிருக்குமாறு கவனமெடுக்குமாறும் சுட்டிக்காட்டியது. | 04.10.2024 ஆம் திகதி ஆனபோது நாடு பூறாகவும் அனைத்துவிதமான பொலிஸ் நிலையங்களிற்கும் வினியோகம் செய்யப்பட்டிருந்த, இருக்கும் காலம் கடந்த கண்ணீர்ப் புகைகள் ( Tear Gas shells ) மற்றும் கண்ணீர்ப் புகைக்குண்டுகள் ( Tear Gas Grenades ) பொலிஸ் மத்திய ஆயுதக் களஞ்சியத்திற்கு எடுத்து அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருக்கும் தொகையில் காலம் கடந்த திகதிகள் சம்பந்தமாக கவனமெடுத்து கட்டளைகளை மேற்கொண்டுள்ளதுடன் இறுதியாக 19.10.2023 ஆம் திகதி கண்ணீர் வாயு ரவைகள் 10,000மும் மற்றும் கண்ணீர்ப் புகைக்குண்டுகள் 5,000 மும் இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 08. | சர்வதேச ஒப்பந்தங்களின் பிரகாரம் கண்ணீர்ப் புகை பாவித்தல் மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் மக்களைக் கட்டுப்படுத்தல் | சர்வதேச ஒப்பந்தங்களின் பிரகாரம் கண்ணீர்ப் புகை பாவித்தல் மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் மக்ளைக் கட்டுப்படுத்தல் சம்பந்தமாக பின்பற்றப்பட வேண்டிய சட்டதிட்டங்கள் சர்வதேச ஒப்பந்தங்களின்படி இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவினதும் வழிகாட்டல்களைப் பெற்றுக்கொண்டு அதன்படி நடந்துகொள்ளுமாறும் அது சம்பந்தமான அறிக்கையினை 01 ஆடி மாதம் 2023 ஆம் திகதிக்கு முன்னர் தெரிவுக்குழுவிற்கு பெற்றுக்கொடுக்குமாறும் பொது மக்கள் பாதுகாப் அமைச்சின் செயலாளரிற்கு தெரிவுக்குழுவினால் கட்டளையிடப்பட்டது. | சட்டவிரோதமான கூட்டத்தைக் கலைக்கும்போது தற்சமயம் பாவிக்கும் முறைமைகள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள மக்கள் கலவரங்களின் போது பொலிஸினால் பலப்பிரையோகம் பாவித்தல் சம்பந்தமான வழிகாட்டல்களில் தொடர்பான விடயதானங்களை ஆராய்ந்து பார்ப்பதுடன் சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்ைக எடுக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் ஆலோசனைகள் கிடைத்தவுடன் மக்கள் கலவரங்களின் போது பொலிஸினால் பலப்பிரையோகம் பாவித்தல் சம்பந்தமாக வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்ட வண்ணமுள்ளது |
| 09. | பொலிஸ் மத்திய ஆயுதக் களஞ்சியத்திலிருக்கும் ஆயுதங்களினது தரவுகள் இல்லாமை மற்றும் காலம் கடந்த ஆயுதங்களை வைத்திருப்பது ஆபத்தானதெனவும். | | 2024 ஆம் ஆண்டில் கணனி வன்பொருள் தரவு தயாரிக்கப்பட்டு இந்த வன்பொருள் தரவினை 06.12.2024 ஆம் திகதி தொடக்கம் தொழில’நுட்பத் தொகுதியூடாக பின்பற்றிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 10. | பொலிஸ் சேவையினை திறம்படச் செயற்படுத்தல் | இதற்குப் பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் சிறைச்சாலைகள் மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் ஆகிய அனைத்துவிதமான உரிய நிறுவனங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பை ஏற்படுத்தக்கூடிய வேலைத்திட்டம் ஒன்று இருப்பது | பொலிஸ் சேவையினை செயற்பாட்டு ரீதியில் நடாத்திச் செல்ல அனைத்துப் பொலிஸ் நிலயங்களிலும் VPN ஆகிய AFIS ( Automated Finger prints Identification System ) AMIS ( Arrested Monitoring Identification System ) மற்றும் CIAS ( Criminal Intelligence |

| | | | |
|---|---|---|---|
| | | சிறப்பானதென தெரிவுக்குழு சுட்டிக்காட்டியது. | Analyze System ) கணணித் தரவுகள் சம்பந்தமாக அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் நேரடித் தொடர்பு வழங்கப்பட்டுள்ளது.அதனூடாக பொலிஸ் நிலையத்திலிருந்தவாறே கணணித் தரவுகளை மேற்பார்வை செய்திட பொலிஸ் நிலையங்களிற்கு இயலுமையுள்ளது.<br><br>குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் மற்றும் ஆட்பதிவுத் திணைக்களத்தின் செயற்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ள E - passport மற்றும் E – Nic என்பனவற்றின் கணணித் தரவுகளுடன் மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களத்தில் உருவாக்கிட தீர்மானிக்கப்பட்டுள்ள PIMS prison Information Management System எனும் கணணித் தரவுகளுடன்தொடர்பு கொள்வதற்கான இயலுமை இலங்கைப் பொலிஸிடம் எதிர்காலத்தில் கிடைக்கும் என்பதுடன் உரிய நிறுவனங்களினால் அது சம்பந்தமாக இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>நீதிமன்றங்களில் இருக்கும் அனைத்துவிதமான கணணித் தரவுகள் ஒன்றிணைக்க நீதி |

| | | | |
|---|---|---|---|
| | | | அமைச்சானது ஐக்கிய நாடுகள சபையுடன் தொடர்பு கொண்டு கீழ் வரும் செயற்பாடுகளை ( UNDP – United Nation Development Project ) ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன் அவ் வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி பின்னர் நீதிமன்றத்துடன் தொடர்பு கொள்வதற்கான இயலுமை இலங்கைப் பொலிஸிற்குள்ளது.<br><br>Data Snapshot for the Justice Sector Rapid Digital Strategy for the Justice Sector. |
| 11. | சாரதி அனுமதிப் பத்திரங்கள் சம்பந்தமாக புள்ளியிடும் முறைமை ( Demerit Point Sistem ) | இந்த புள்ளியிடும் முறைமை ( Demerit Point Sistem ) செயற்படுத்தல் சம்பந்தமாக விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு தெரிவுக்குழுவினால் பொது மக்கள் பாதுகாப் அமைச்சின் செயலாளரிற்கு கட்டளையிடப்பட்டது. | இதுவரை இலங்கை தகவல் தொடர்பாடல் நிறுவனத்தினால் ( ICTA ) செயற்படுத்தப்பட்ட விரைவாகத் தண்டப்பணம் அறவிடும் முறைமையுடன் இந்த புள்ளியிடல் முறைமை செயற்படுத்தும் இயலுமை இருக்கின்றதாவென்பது சம்பந்தமாகவும் மற்றும் புள்ளியிடல் முறைமை செயற்படுத்தும் முறைமை தயாரிப்பது சம்பந்தமாகவும் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயக அலுவலகம், வாகனப் போக்குவரத்து அமைச்சு, இலங்கைப் பொலிஸ், சட்டமா அதிபர் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து ஆகிய அனைத்துவிதமான உரிய நிறுவனங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பை ஏற்படுத்தக்கூடிய வேலைத்திட்டம் ஒன்று இருப்பது |

| | | | |
|---|---|---|---|
| | | | சிறப்பானதென தெரிவுக்குழு சுட்டிக்காட்டியது. |
| 12. | பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கான மொழிப் பயிற்சி வேலைத்திட்டத்திட்டம் செயற்படுத்தல் | பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கு மொழிப் பிரச்சனை காரணமாக தமிழ் மொழி பேசப்படுகின்ற பிரதேசங்களில் கடமையிலீடுபடுகின்ற போதும் மற்றும் சுற்றுலாப்பயணிகளுடன் தொடர்பு கொள்ள ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களிலும் சிரமங்கள் பலவற்றிற்கும் முகம் கொடுக்கப் படுவதாக சுட்டிக்காட்டிய தெரிவுக்குழு அப்படியான உத்தியோகத்தர்களிற்கு மொழிப் பயிற்சி வழங்குவதுன் முக்கியத்துவத்துவம் கவனத்தில் கொள்ளப்பட்டது. | தேசிய பொலிஸ் அப்பியாச மத்திய நிலையமூடாக பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கு நாடு பூறாவுமுள்ள அனைத்து மாகணங்களையும் உள்வாங்கி சேவைக்காலப் பயிற்சிக் கிளை 09 ஊடாகவும் மற்றும் ஒன்லையின் முறைமையிலும் தமிழ் மொழிப் பயிற்சி வேலைத்திட்டம் செயற்படத் தொடங்கியுள்ளதுடன் அந்த வேலைத்திட்டத்தின் கீழ் 2023 ஆண்டில் உத்தியோகத்தர்கள் 2379 பேரும் 2024 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர்கள் 3079 பேரும் 2025 ஆண்டிலிருந்து இதுவரை உத்தியோகத்தர்கள் 2675 பேரும் தமிழ் மொழிப் பயிற்சிப் பாடநெறி நிறைவு செய்துள்ளதுடன் இந்த மொழிப் பயிற்சி வேலைத்திட்டம் விரிவு படுத்தி தேசிய பொலிஸ் அப்பியாச மத்திய நிலையமூடாகச் செயற்படுத்தப்படுகின்றது. |

ஆனந்த விஜேபால ( பா.உ )
பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்.